இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 18.10.2026

எஸ்.ஐ.ஆருக்கு எதிராக எத்தனை போராட்டங்கள்....?

LDIணிக்கம் தாகூரும், ஆதவ் அர்ஜுனாவும் வந்து அரசியல் பாடம் எடுக்கும் அளவுக்கு தமிழ்நாடு தரம் தாழ்ந்துவிட்டதை நினைத்துத்தான் வேதனையாக இருக்கிறது.

எஸ்.ஐ.ஆருக்கு எதிராக ஏன் போராடவில்லை தி.மு.க. என்று கேட்கிறார் மாணிக்கம் தாகூர். 'எஸ்.ஐ.ஆரை நடத்தியதே தி.மு.க. தான், என்கிறார் ஆதவ் அர்ஜுனா. இவர்கள் எல்லாம் இதற்கு முன்னால் எங்கு இருந்தார்கள் என்று கேட்பதை விட இவர்களுக்கு எல்லாம் மூளை என்ற ஒன்றே இருக்கிறதா என்று தான் கேட்கத் தோன்றுகிறது.

"கடந்த மார்ச் மாதத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நோட்டீஸ் கொடுத்தோம். இனியும் அவர் அந்தப் பதவியில் நீடிக்கக் கூடாது. ஞானேஷ் குமார் அவர்கள் உடனடியாகப் பதவி விலக வேண்டும். SIR நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். இதுவரை தேர்தல் ஆணையத்தில் நடந்த அனைத்தும் நியாயமான முறையில் விசாரிக்கப்பட்டு இதற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என தி.மு.க. சார்பில் வலியுறுத்துகிறோம்." என்று தி.மு.க. தலைவர் மிகத் தெளிவாகக் கொடுத்த அறிக்கை காங்கிரஸ் கட்சிக்கும், த.வெ.க.வுக்கும் புரியவில்லையா?

'வாக்காளர் பட்டியல் தீவிர சீர்திருத்தம்' என்ற பெயரால் எடுக்கப்படும் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகளை மிகத் தீவிரமாக கண்காணிக்கச் சொன்ன இயக்கமேதிராவிடமுன்னேற்றக்கழகம்தான். அத்தகையநடவடிக்கையை தமிழ்நாட்டில் தேர்தல் ஆணையம் எடுப்பதற்கு முன்னதாக பல்வேறு மாநிலங்களில் செய்தது. அப்போதே அதை எதிர்த்த இயக்கம் தி.மு.க.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இப்பணிகளை தமிழ்நாட்டில் தொடங்கியது தேர்தல் ஆணையம். அப்போது தி.மு.க. ஆட்சியில் இருந்தது. 'வாக்காளர் பட்டியலில் சீர்திருத்தம் என்பதை அவசர அவசரமாகச் செய்யக் கூடாது' என்று அன்றே கண்டித்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். 'மழைக்காலத்தில் அவசர அவசரமாகச் செய்தால் ஏராளமான வாக்காளர்கள் பெயர் சேர்க்கப்படாது, நீக்கப்பட்டு விடும்' என்று சொன்னவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இதற்கு கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்யும் விதமாக நவம்பர் 2 ஆம் தேதியன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடந்ததை யாரும் மறந்திருக்க முடியாது. 46 கட்சிகள் அதில் கலந்து கொண்டன. அப்போதெல்லாம் மாணிக்கம் தாகூர் டெல்லியில் என்ன செய்து கொண்டு இருந்தாரோ?

அன்றைக்கு விஜய் கட்சி என்ன செய்து கொண்டு இருந்தது? அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கெடுக்கவில்லை. அந்தக் கட்சிதான் இன்றைக்கு ஆட்சியில் இருக்கிறது. எஸ்.ஐ.ஆர். எல்லாம் முடிந்த பிறகு அதை எதிர்ப்பதாக நாடகம் ஆடுகிறது விஜய் கட்சி.

அந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில்தான் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

"தேர்தல் ஆணையம் இந்தக் கருத்துக்களை ஏற்காவிடின், தமிழ்நாட்டு வாக்காளர்கள் அனைவரின் வாக்குரிமையையும் நிலைநாட்ட உச்சநீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. தேர்தல் ஜனநாயகத்தைக் காப்பாற்றிட தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் தனித்தனியே / ஒருங்கிணைந்து உச்சநீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்வது எனவும் இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் தீர்மானிக்கிறது." என்பதுதான் அன்று எடுக்கப்பட்ட தீர்மானம். வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகளை தமிழ்நாட்டில் செய்யக் கூடாது, 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாகச் செய்யவே கூடாது என்பதை திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னபோது தி.மு.க. கூட்டணியில் இருந்தவர்கள்தான் இன்றைக்கு த.வெ.க. ஆட்சியைத் தூக்கிச் சுமந்து கொண்டிருக்கக்கூடிய கட்சிகள். அணி மாறியதால் கடந்த கால வரலாறு மாறி விடுமா?

2025 நவம்பர் 11 தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் சார்பில் தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது மறந்து விட்டதா?

அதை மீறியும் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகளில் தீவிரமாக இருந்தது தேர்தல் ஆணையம். அப்படி நடத்தப்படும் வாக்காளர் சேர்ப்பு - நீக்க நடவடிக்கைகளைக் கண்காணிக்க உத்தரவிட்டதும் தி.மு.க.தான். வாக்காளர்களைத் திட்டமிட்டு நீக்கி இருந்தால் அவர்களை உடனடியாக சேர்க்க வைக்க வேண்டும் என்று தி.மு.க.வின் பூத் ஏஜெண்ட்டுகளுக்கு தி.மு.க. தலைமை கட்டளையிட்டது.

இந்தக் கடந்த கால வரலாறு எதுவும் தெரியாமல், புரியாமல், அறியாமல் உளறிக் கொண்டிருக்கிறார்கள் மாணிக்கம் தாகூரும், ஆதவ் அர்ஜுனாவும்.

'இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை நீக்கும் கோரிக்கை திசை திருப்பும் தந்திரம்' என்று சொன்னவர் அமைச்சர் ராஜ்மோகன். இப்படிச் சொன்னவர், ஞானேஷ் குமாரை விமர்சிக்கும் ஆர்ப்பாட்டத்தில் எப்படி கலந்து கொண்டார்? திசை திருப்பவா? மாநிலம் முழுக்க பல்வேறு பிரச்சினைகளுக்காக த.வெ.க. அரசு மீது மக்கள் கொந்தளித்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் இருந்து திசை திருப்புவதற்காக ஞானேஷ்குமாருக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டதா த.வெ.க.? அதுதானே உண்மை?

எஸ்.ஐ.ஆருக்கு எதிரானது த.வெ.க. என்றால், ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும் என்பது உண்மையான நோக்கமாக இருந்தால் அதற்கு எதிரான போராட்டங்களை தமிழ்நாட்டில் எதற்காக ஒடுக்குகிறீர்கள்? போராடுகிறவர்களை எதற்காக அடிக்கிறீர்கள்? உதைக்கிறீர்கள்? கைது செய்கிறீர்கள்? அனைவரும் அமைதி வழியில், ஜனநாயகப் பூர்வமாகத் தானே போராடுகிறார்கள்? அதனை ஒடுக்குவதற்கு என்ன காரணம்? பா.ஜ.க.வை மகிழ்ச்சிப்படுத்த மக்களை அடித்து உதைக்கிறது த.வெ.க. அரசு.

காங்கிரஸின் ஐந்து எம்.எல்.ஏ.க்கள் ஆதரவுக்காக அவர்கள் நடத்தும் கூட்டத்துக்கு ஒப்புக்குப் போய் உட்கார்ந்து கொள்கிறது த.வெ.க.

சந்தர்ப்பவாதத்தையும் இவ்வளவு சந்தோஷமாக எந்தக் கட்சியும் இதுவரை செய்யவில்லை. விஜய்தான் இதிலும் முதல்.

தமிழ் நிலத்தின் தன்மானம் காத்த தியாகி, வீரபாண்டிய கட்டபொம்மன்!

நினைவுநாளில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, அக். 18-

விடுதலைப் போராளி வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவு நாள் நேற்று முன்தினம், அதனையொட்டி விடுத்த வலை தளப் பதிவில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், "தமிழ் நிலத்தின் தன்மானம் காத்த தியாகி வீரபாண்டிய கட்டபொம்மன் புகழ் வாழ்க!" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

தூக்குமேடைக்கு நடந்து செல்லும் போதும் துணிச்சலோடும் கர்வத்தோடும் சென்ற விடுதலைப் போராளி வீர பாண்டிய கட்டபொம்மன் நினைவுநாள்!

மானம்தான் பெரிதென வாழ்ந்து,



அந்நியர் ஆட்சிக்கு எதிரான கனலை மக்கள் மனதில் விதைத்த அவரது வீரத்துக்குத் தலைவணங்குகிறேன்.

வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு நமது திராவிட மாடல் அரசில் சென்னை காந்தி மண்டப வளாகத்தில் திருவுருவச் சிலை அமைத்ததுடன், மதுரையில் திருமங்கலம் - கள்ளிக்குடி இரயில் நிலையங்களுக்கு இடையே கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்துக்கும் அவரது பெயரைச் சூட்டிப் பெருமை கொண்டோம்!

தமிழ் நிலத்தின் தன்மானம் காத்த தியாகி வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்க!

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கழக அரசின் திட்டங்களை ரத்து செய்து U-Turn அடிப்பது என்று 'சர்க்கஸ்' நடத்தாமல்

மக்கள் நலன் சார்ந்த ஆட்சியை 'டம்மி' முதலமைச்சர் நடத்த வேண்டும்!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக். 18-

கோவையில் "பெரியார் அறிவுலகம்" திறக்கப்படுவதையொட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வலைதளப் பதிவில், "கழக அரசு சூட்டிய பெயர்களை மறைப்பது - திட்டங்களை Cancel செய்வது - Cancel செய்தவற்றையே Cancel செய்து UTurn அடிப்பது என்று Circus நடத்தாமல் மக்கள் நலன் சார்ந்த ஆட்சியை இந்த Dummy முதலமைச்சர் நடத்த வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு :-

நம் திராவிட மாடல் ஆட்சியில் ரூ.290 கோடி மதிப்பில் கோவையில் கட்டியெழுப்பப் பட்டுள்ள பெரியார் அறிவுலகம் மற்றும் அறிவியல் மையம் இன்று திறக்கப்படுவதில் மகிழ்ச்சி கொள்கிறோம்.

இந்த மாபெரும் அறிவுச் சுரங்கத்தை கோவை வாழ் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வாழ்த்துகிறோம்.

வழக்கமாக கழக அரசின் திட்டங்கள் மீது ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்பவர்கள், இந்த முறை பெரியார் அறிவுலகத்தில் 'நான் முதல்வன்' என்ற பெயரின் மீது ஸ்டிக்கர் ஒட்டி மறைத்து இருக்கிறார்கள்.

இந்த Cheap CMஇன் Sticker



ஆட்சியில், நான் முதல்வன் திட்டத்தைச் சிதைத்ததோடு மட்டுமின்றி, அதன் பெயரைக் கூட ஏற்க மனமில்லை என்றால் என்ன காரணம்?

'முதல்வன்' என்று சொன்னாலே கழகத்தலைவர் அவர்கள் பெயர்தான் நினைவுக்கு வருகிறதா?

இல்லை, நம் மாணவர்கள் அவரவர் துறையில் முதல்வர்கள் ஆவது பிடிக்கவில்லையா?

கழக அரசு சூட்டிய பெயர்களை மறைப்பது - திட்டங்களை Cancel செய்வது - Cancel செய்தவற்றையே Cancel செய்து UTurn அடிப்பது என்று Circus நடத்தாமல் மக்கள் நலன் சார்ந்த ஆட்சியை இந்த Dummy முதலமைச்சர் நடத்த வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மற்றவர்கள் மீது பழிபோடுவதை முதலில் நிறுத்துங்கள்!

பதுக்கல் கும்பல் மீது நடவடிக்கை எடுப்பதை எது தடுக்கிறது?

விலைவாசி உயர்வு குறித்த உணவுத் துறை அமைச்சரின் உண்மைக்குப் புறம்பான செய்திக்கு – முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி பதிலடி!

சென்னை, அக். 18-

"மற்றவர்கள் மீது பழி போடுவதை முதலில் நிறுத்துங்கள்!" என்றும், "பதுக்கல் கும்பல் மீது நடவடிக்கை எடுப்பதை எது தடுக்கிறது?" என்றும் விலைவாசி உயர்வு குறித்த உணவுத் துறை அமைச்சரின் உண்மைக்குப் புறம்பான செய்திக்கு முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி பதிலடி கொடுத்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி விடுத்துள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:-

விலைவாசி உயர்வால் ஏழை எளிய மக்கள் துன்பத்தில் இருக்கும்போது, முதலில் விலையேற்றம் இல்லை என ஆணவத்தோடு பேட்டி கொடுத்த நீங்கள், தி.மு.க. விடுத்த சவாலுக்குப் பயந்து விலை யேற்றம் இருப்பதை ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

நிர்வாகத் திறன் இன்றி இன்னும் எதிர்க்கட்சியாகவே தங்களை நினைத்து, மற்றவர்கள் மீது பழி போடும் அரசியலை



முதலில் நிறுத்துங்கள்.

விலையேற்றத்தைத் தடுப்பதும், பதுக்கலைத் தடுப்பதும் உங்கள் துறையின் வேலைதான் என்பதை மறந்துவிட்டு இப்படி பேட்டி தருவதற்கு முன், தங்களின் பணிகள் என்ன என்பதை அதிகாரிகளிடம் ஒரு முறை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

பதுக்கியவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தும் திறமை இந்த அரசுக்கு இல்லையா? இல்லை பதுக்கியவர்களோடு டீல் போட்டு அவர்களைக் காப்பாற்றுகிறீர்களா? அல்லது கற்பனைக் கதைகளைச் சொல்லி ஒரு யூனிட் மின் சாரத்தை 35 ரூபாய்க்கு வாங்கும் உங்கள் மின் துறை அமைச்சரைப் போல நீங்களும் சிறப்புத் திட்டங்கள் வைத்துள்ளீர்களா?

பதுக்கல் கும்பல் மீது நடவடிக்கை எடுப்பதை எது தடுக்கிறது?

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை தடுக்கத் தவறிய தாங்கள், வழக்கம்போல Conspiracy கதைகள் மூலம் இதையும் மடைமாற்றாமல் ஆக்கப்பூர்வமான நடவடிக்கையில் இறங்குங்கள். இல்லையென்றால், குரங்கு கையில் பூமாலை என்பதற்கு இந்த த.வெ.க. அரசே சாட்சியாகிவிடும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாத த.வெ.க. அரசைக் கண்டித்து

அக்.21ஆம் தேதி 600 இடங்களில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!

விழுப்புரம், அக். 18-

பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யாத த.வெ.க. அரசைக் கண்டித்து அக்.21ம் தேதி 600 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என விவசாயிகள் சங்கம் அறிவித்துள்ளது. தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக் குழுக் கூட்டம் விழுப்புரத்தில் நேற்று நடந்தது.

இதில் பங்கேற்ற மாநில பொதுச் செயலாளர் நடராஜன் அளித்த பேட்டி வருமாறு:-

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்ற த.வெ.க. அரசு கூட்டுறவு வங்கிகளில் 5 ஏக்கர் வரை பெற்றுள்ள பயிர்க்கடன்களை முழுமையாக வும், 5 ஏக்கருக்கு மேல் பெற்றுள்ள பயிர்க்கடன்களில் 50 சதவீதத்தையும் தள்ளுபடி செய்வதாக தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தது

ஆனால் தற்போது வரை அந்த வாக்குறுதியின்படி கடன் தள்ளுபடி செய்யப்படவில்லை. தொடர்ந்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் நடத்திய போராட்டத்தின் விளைவாக சென்னை தலைமைச் செயலகத்தில் 9 அமைச்சர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் 20க்கும் மேற்பட்ட விவசாய சங்கங்களின் நிர்வாகிகள் பங்கேற்று கோரிக்கைகளை வலியுறுத்தினர். அப்போது அமைச்சர்களும், அலுவலர்களும் முதல்வரின் கவனத்துக்கு கொண்டு சென்று, விரைவில் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்படும் எனக் கூறினர்.

இதுவரை அரசு சார்பில் 3 முறை அறிவிப்பு வெளியிடப்பட்டாலும், கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் தள்ளுபடி அறிவிப்பு அமையவில்லை. தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றக் கோரியும், கூட்டுறவுப் பயிர்க்கடன்களை முழுமையாகத் தள்ளுபடிசெய்ய வலியுறுத்தியும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாயிகள் மகாசபை உள்ளிட்டவை இணைந்து, வருகிற 21ம் தேதி தமிழகத்தில் 600 இடங்களில் சாலை மறியல் போராட்டத்தை நடத்தவுள்ளது.

தமிழகத்தில் பருவநிலை மாற்றத்தால் டெல்டா மாவட்டங்கள், தெற்கு, வடக்கு, மேற்கு மாவட்டங்களில் பயிர் சாகுபடி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும். தமிழகத்தில் அரிசி விலை உயரவில்லை என உணவுத்துறை அமைச்சர் கூறுவது உண்மைக்குப் புறம்பானது. முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போன்று பேசுகிறார்.

உச்சநீதிமன்ற இறுதித் தீர்ப்பின்படி தமிழகத்துக்கு பெற வேண்டிய காவிரி நீரை பெற ஒன்றிய அரசுக்கு அழுத்தம் தர, அனைத்துக் கட்சிகள் மற்றும் விவசாயிகள் சங்கக் கூட்டத்தை கூட்டி, பிரதமரை சந்திக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.